DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் புதன்கிழமை 2ம் நாள் சாட்சியாகிய வினாயகம் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| பெயர் | வினாயகம் | வயது | 29 |
|---|---|---|---|
| த/பெ. | வரதன் | இனம் | ஆண் |
| கிராமம் | கீழவனம் | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.111/2023**
(1,2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை).

**முதல் விசாரணை 02.04.2025 அ.சா.1**

1. நான் தற்போது கீழவனத்தில் வசித்து வருகிறேன். 2023ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை இரவு 7 மணிக்கு கீழவனத்தில் உள்ள எங்கள் கழனியில் அரிநாதன், மணிவேல் ஆகியோர் வந்து என்னை பின்னந்தலையில் கத்தியால் வெட்டினார்கள். என்னை காலி செய்து விடுவேன் என்றும், கை, கால்களை உடைத்து விடுவேன் என்று மிரட்டினார்கள். பொது கிணற்றில் இருந்து எங்களது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச சென்றதால் என்னை, எதிரிகள் வெட்டினார்கள்.

2. அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் வந்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அது நான் கொடுத்த புகார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** நீதிமன்றத்தில் எதிரிகள் மணிவேல், அரிநாதன் ஆஜராகி உள்ளார்கள். நான் 1 வாரம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கத்தியால் என்னை எதிரிகள் வெட்டினார்கள். மண்வெட்டியை 2வது எதிரி கையில் வைத்திருந்தார். **(சி.பி.226/2023ல் கண்ட மண்வெட்டி சான்று பொருள்–1 ஆகவும், கத்தி சான்று பொருள்–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்–</u>**

3. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.